## வடமேல் மகாண சபை - 2018

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வட மேல் மாகாண சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை ஆகஸ்ட் 21 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடமேல் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்றில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 24,662,186,761 என கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் அட்டவணைகளின் பிரகாரம் அப்பெறுமதி ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. காசு மற்றும் வங்கி மீதியின் கீழ் பொருட்களை அடகுக்கு பெறுவோரிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்களாக ரூபா 18,798,600 குறிப்பிடப்பட்டிருந்த போதும் வங்கி உறுதிப்புட்ததலின் பிரகாரம் அம்மீதி ரூபா 16,198,600 ஆக இருந்தமையால் ரூபா 2,600,000 வேறுபாடு காணப்பட்டது. | அட்டவணைகளுடன் ஒப்பிடப்பட்டு சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உளள்டக்கப்பட வேண்டும். | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆண்டின் போது ஒவ்வொரு மூலதன செலவின விடயத்தின் கீழ் வரும் மொத்த செலவினம் ரூபா 24,662,186,761 என பதிவு செய்யப்பட்டிருந்தது. அநேகமான சந்தர்ப் பங்களில் ஒவ்வொரு அமைச்சும் அதன் கீழ் காணப்படும் திணைக் களத்திற்கு ஒதுக்கும் போது அம் மூலதன செலவின கணக்கீடு செய்வதற்குரிய செலவின தலைப்பிற்கு நேர்வதுடன் சொத்துக்கள் செலவினம் மேற்கொள்ளப்பட்ட தலைப் பிற்காக கணக்கீடு செய்யப்படும் இச் செயற்பாடு சரியாக செய்யப்பட வேண்டுமாயினும் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட செலவின தலைப்பில் அச் சொத்துக்கள் விநியோகம் எனவும் செலவினம் மேற்கொள்ளப்பட்ட செலவினத் தலைப்பு சொத்துக்கள் பெற்றுக் கொள்வதாகவும் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் சில அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் அதனை சரியாக மேற்கொள்ளா மையால் அவ்வேறுபாடு உருவாகியுள்ளதாக சுட்டிக் |

காட்டப்படுவதுடன் எதிர்வரும் ஆண்டிலிருந்து அச் செயற்பாட்டை சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படுவதாக அறிய தருகிறேன்.

### 1.6.2 இணக்கமின்மை

#### 1.6.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 2018 திசெம்பர் 31 இல் உளள்வாறு பொது வைப்புக்கள் மீதிகள் தொடர்பான காலப் பகுப்பாய்வின் பிரகாரம் பிரதான அமைச்சு, சுகாதார மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சு மற்றும் 03 திணைக்களங்களுக்குரிய தீர்வுசெய்யப்படாத வைப்புக்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 153,520,507 ஆக இருந்தது. | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | (i) செயற்திட்டங்களில் நடவடிக்கை பூர்த்தி செய்யப்படாதால் இறுதி தீர்மானம் எடுக்கும் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளது.<br>(ii) பொது வைப்புக் கணக்கில் உள்ள காலாவதியான மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பதிவு செய்யப்படாமல் இருந்ததுடன் தற்போது அம் மீதிகளை தீர்வு செய்து வருவதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (ஆ) | வடமேல் மாகாண நிதி விதிக்கோவை | | | |
| | மாகாண நிதி விதி 54.6 | குருணாகல் மாவட்ட சுகாதார அலுவலகத்திற்குரிய சுகாதார மருத்துவ நிறுவனங்களில் இடம்பெற்ற 16 | வாகன விபத்துக்கள் இடம்பெற்றவுடன் துரிதமாக ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு முழு | இவ் வாகனங்களுக்காக ஆரம்ப விசாரணை மேற் கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் அப் புலனாய்வுகளுக்கு உரிய |

| | | | |
|---|---|---|---|
| | வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்களுக்குரிய ஆரம்ப புலனாய்வு நடாத்தப்பட்டு பொறுப்பானவர்களிடமிருந்து அந்நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கைக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறிக்கை 2019 யூன் 28 ஆந் திகதிக்கு முன்னர் வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| தாபன விதிக் கோவை ix ஆம் அத்தியாயத்தின் 5.6 பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட 1990 யூன் 05 ஆம் திகதிய மாகாண அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 3(ஆ) பிரிவு | சுற்றறிக்கைக்கு முரணாகவும் ஆளுனரின் அங்கீகாரம் இன்றி 2011 முதல் 2017 ஆம் ஆண்டு வரை நிர்வாக செலவினத்திற்காக கிடைத்த பணத்தில் 20 சதவீதம் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு எஞ்சிய 80 சதவீதமான ரூபா 2,386,681 தொகை 2013, 2015 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது சபையில் சேவை புரிந்த 22 உத்தியோகத்தர்களுக்கு இடையே கொடுப்பனவு செய்வதற்கு உள்ளூராட்சி திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தாபன விதிக்கோவை மற்றும் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதால் அங்கீகாரமின்றி கொடுப்பனவு செய்த பணத்தை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1990 யூன் 05 ஆம் திகதிய மாகாண அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் பிரதியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு ஆராயப்பட்டதன் பின்னர் பதில் சமர்ப்பிக்கப்படும் |

**2. வருமான நிர்வாகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 31 உள்ளூராட்சி மன்றங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதி திகதியில் சேகரிக்கப்பட்ட முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் முறையே ரூபா 323,229,932 மற்றும் ரூபா 150,896,239 தொகை பிரதான செயலகத்தினால் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு உரித்தாக வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணத்தை என்பவற்றை அந் நிறுவனங்களுக்கு முடியமான வரை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இத்தொகையை மாகாண சபை செயற்பட்ட காலப்பகுதியில் குறித்த உள்ளூராட்சி மன்றங்களால் மாகாண சபையின் தலைமை அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் உள்ளூர்ராட்சி மன்றங்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்தவுடன் உள்ளூராட்சி மன்றங்களின் நிதி கோரும் கடிதங்கள் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் பணம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதாக தயவுடன் குறிப்பிட விரும்புகிறேன். |
| (ஆ) | தலைமை செயலாளர் அலுவலகம், மாகாண வருமானத் திணைக்களம் மற்றம் காணி ஆணையாளர் திணைக்களம் என்பவற்றினால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 வருமானக் குறியீடுகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 236,210,685 கூட்டுத்தொகையான நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமான அறவீடு செய்வதற்குரிய முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் ஆராய்ந்து பதில் அளிப்பதாக பதில் சமர்ப்பிக்கின்றேன். |
| (இ) | 03 வருமானக் குறியீடுகளுக்குரிய ரூபா 58,171,390 கூட்டுப்பெறுமதியான நிலுவை வருமானம் 2018 ஆம் ஆண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தன. | நிலுவை வருமானம் பதிவழிக்கப்படும் போது வருமானம் மதிப்பீடு செய்தல் தொடர்பாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் ஆராய்ந்து பதில் அளிப்பதாக பதில் சமர்ப்பிக்கின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 14 பிரதேச செயலகங்களினால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய விளைச்சல் வரி மற்றும் காணி வரி ரூபா 65,488,945 ஆக இருந்தது. | நிலுவை வருமான அறவீடு செய்வதற்குரிய முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக எதிர்காலத்தில் ஆராய்ந்து பதில் அளிப்பதாக பதில் சமர்ப்பிக்கின்றேன். |

**3 நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மாகாண சபை நிதியத்தின் ரூபா 274,433,543 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கெதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,072,313,658 ஆகும்.

**04. நியதிச்சட்ட கணக்குகள்/ நிதியக்கணக்குகள்/ வணிக முற்பணக் கணக்குகள் மற்றும் ஏனைய முற்பணக் கணக்குகள்**

**4.1 அதிகாரசபைக் கணக்குகள் / நிதியக் கணக்குகள்**

**(அ) வயம்ப முன்பருவ கல்வி அபிவிருத்தி அதிகாரசபை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 இன் 04 ஆம் இலக்க வயம்ப முன்பருவ கல்வி அபிவிருத்தி அதிகாரசபை சாசனத்தின் 04(2) பிரிவின் பிரகாரம் வடமேல் மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ள 2,238 அரச மற்றும் தனியார் முன்பள்ளி பாடசாலைகளில் 903 பாடசாலைகள் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் 720 பாடசாலைகள் முன்பள்ளி கல்வி அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் காணப்பட்டன. | முன்பருவ கல்வி அபிவிருத்தி அதிகாரசபையின் சாசனத்தின் கீழ் பாடசாலைகளை பதிவும் சாசன ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட தற்காலிக பதிவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் அனைத்து முன்பள்ளி பாடசாலைகள் ABCD வகையின் பிரகாரம் 2020 மே 31 ஆந் திகதிக்கு முன்னர் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) வடமேல் மனிதவள அபிவிருத்தி அதிகாரசபை**

| | | | |
|---|---|---|---|
| (i) | குருணாகல் டீ.பீ.வெலகதர ஆயுர்வேத வைத்தியசாலை வளவில் இருந்த சந்தன மரதம் 2013 ஏப்ரல் 14 ஆந் திகதி திருடர்களால் வெட்டியமை தொடர்பாக மனிதவள அபிவிருத்தி அதிகார சபையால் சேவையில் ஈடுபடுத்தியிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரிடமிருந்து அப்பெறுமதியை அறவிட்டு பணத்தை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அதிகாரசபையால் ரூபா 352,000 | முறையான பரிசோதனையொன்ற மேற்கொள்ளப்பட்டு பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அத்திகதியில் சேவை புரிந்த பாதுகாப்பு உத்தியோகத்தரிடமிருந்து இப்பணத்தை அறவிட முடியாமையால் தலைமை செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் இத்தொகையை கொடுப்பனவு செய்ய நேர்ந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | தொகை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு 2018 ஆகஸ்ட் 21 ஆந் திகதிகொடுப்பன செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | மனிதவள அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட சுழற்சிக் கடன்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்படாத 07 ஆண்டுகளுக்கு மேல் பழமையான கடன் தவணை மற்றும் வட்டி ரூபா 10,194,983 ஆக இருந்தது. | நிலுவை கடன் மீதிகள் அறவிடுவதற்காக முறையான நடவடிக்கைளை எடுப்பதற்கு அவசியமாகும். | இந்நிறவகம் வழங்கும் கடன்தொகைக்கு உரிய நிலுவை கடன் மீதிகள் காணப்படுவதுடன் பொருளாதார சிக்கல்கள் மத்தியில் தவணை குறையொன்று காணப்பட்ட போதும் பகுதி பகுதியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| **(இ)** | **கைத்தொழில் சேவைப் பணியகம்**<br>------------------------------------------------------------ | | |
| | ஹெரலியாவெல கைத்தொழில் பேட்டையில் முதலாவது தடவையாக 12 ஏக்கர் 03 ரூட் காணியில் 5.74 ஏக்கர் 04 நிறுவனங்களுக்கு - விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பகுதி முதலீட்டு சபையின் வசம் காணப்பட்டது. இக்காணி கைத்தொழில் சேவைப் பணியகத்திற்க கையேற்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசின் காணியை முழு உடமையாக விற்பனை செய்வது தொடர்பாக முறையான உறுதிப்படுத்தல்கள் மற்றும் கைத்தொழில் பேட்டையில் எஞ்சியுள்ள பணியகத்திற்கு தொடர்பாக முறையான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கைத்தொழில் பேட்டையில் 12 ஏக்கர் 03 ரூட் 03 உரித்து இது வரை பணியகத்தின் பொறுப்பில் காணப்பட்டது. மாகாண சபைக்கு காணிகள் அதிகாரம் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் காணியை நேரடியாக கையேற்பது சிக்கலாக உள்ளது. முதலீட்டுச் சபை உடன்படிக்கை கைச்சாத்திட்ட காணிக்கு வங்கிக்கடன் பெற்றுக் கொள்ள முடியமாக இருப்பதால் 5.74 ஏக்கர் காணியை 4 நிறுவனங்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் உடமை விற்பனை செய்யப்பட்டிருந்தது. |
| **(ஈ)** | **வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை**<br>--------------------------------------------------------------- | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் 11 கடன்பட்டோரிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 11,089,042 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்பட்டோரிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா அனைத்து மீதிகளையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய ரூபா 11,089,042 தொகையில் அறவிடக்கூடிய தொகையை அறவிடு வதற்கும் எஞ்சிய தொகை தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழுவில் கலந்துரையாடப்பட்டதன் பின்னர் தேவையான அடுத்த |

| | | | |
|---|---|---|---|
| | | | கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் 08 கடன்கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய வேண்டிய ரூபா 9,320,083 ஐ தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 27 கடன் கொடுத்தோருக்கான ரூபா 2,649,404 தொகை இதுவைரை முழுமையாக செலுத்தப்பட்டதன் எஞ்சிய கொடுப்பனவு பகுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய ரூபா 9,320.083 ஆன தொகையில் தற்போது வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ள மாகாண திட்ட வட்டமாக அபிவிருத்தி மானிய தொடர் சேவைக்கான பணமும் உள்ளது.<br><br>அத்தொகை கிடைத்ததன் பின்னர் இச் சகல கொடுப்பனவுகளையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |
| (iii) | முறையான சாத்தியவள ஆய்வொன்றில்லா மலும் திட்டமிடல் ஒன்றும் இல்லாமல் ரூபா 12,618,363 செலவிடப்பட்டு மதுரங்குளி சுற்றுலா தகவல் மற்றும் வசதிகள் நிலையம் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத காலப் பகுதியொன்றில் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டது. | சுற்றுலா தகவல் மற்றும் வசதிகள் நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மதுரங்குளி சுற்றுலா தகவல் மற்றும் வசதிகள் நிலையத்தை குத்தகைக்கு எடுத்துள்ள முதலீட்டாளரால் தற்போது எஞ்சியுள்ள அனைத்து நிர்மாணங்களையும் பூர்த்தி செய்த செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு இணக்கப்படாட்டை தெரிவித்திருந்தது. |
| (iv) | ரூபா 3,000,000 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கணனி உபகரணங்களுடன் கூடிய கணனி ஆய்வுகூடம் விளைவற்றுக் காணப்பட்டது. | அதிகாரசபையால்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஹோட்டல் பாடசாலை மாணவர்களின் கணனி பாடநெறிக்காக பங்கு பெறச் செய்யப்பட்டுள்ளனர். கணனி ஆய்வு கூட தற்போது விளைவற்று காணப்படுகின்றது. |

**(உ) கூட்டுறவு அபிவிருத்தி நிதியம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 64 கூட்றவுச் சங்கங்களால் வழங்கப்பட்ட கடன்தொகை ரூபா 68,971,575 தொகை தாமதமடைந்திருந்ததுடன் அக்கடன் தொகையை அறவிடுவதற்கு முறையான நடைமுறையொன்று செயற்படுத்தி இருக்கவில்லை. | கடன்மீதிகளை அறவிடுவதற்கு முறையான நடைமுறையொன்ற பின்பற்றப்பட வேண்டும். | காலம் கடந்த கடன் செயற்பாட்டு சங்கங்கள், செயற்பாடற்ற சங்கங்கள், மற்றும் கலைக்கப்பட்ட சங்கங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு செயற்படும் சங்கங்கக்கு தற்போது அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதுடன் செயற்படாத கலைப்பு சங்கங்கள் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கடன் மீதி அறவிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2018 திசெம்பர் 31 இல் உளள்வாறு வடமேல் மாகாண கூட்டுறவுத் திணைக்களத்திற்குரிய கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து நிதியத்திற்கு கிடைகக் வேண்டிய ரூபா 100,209,014 ஆன பங்களிப்புத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சங்க பங்களிப்புத் தொகையை முறைப்படி கூட்டுறவுச் சங்களுக்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து பலநோக்கு சேவை கூட்டுறவு சங்கங்களுக்காக சட்டரீதியான அங்கீகாரம் வழங்குவதற்கு முன்னர் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திற்குரிய பங்களிப் பினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இதற்கு மேலதிகமானதாக வசதிகளை திருத்தம் செய்யும் போது நிதி பங்களிப்பினை செலுத்துவதற்கு சங்கங்களை அக்கறை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) | தீர்ப்பாளர் கணக்கில் ரூபா 10,500,000 ஆன நிலையான வைப்பு மீதியொன்று காணப்பட்ட போதும் இத்தொகையை கூட்டுறவு சங்கங்களுக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீர்ப்பாளர் கணக்கில் பணத்தை கூட்டுறவு சங்கங்களுக்கு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எப்பொதும் நடைமுறைக் கணக்கில் காணப்படும் மிகை பணத்தினையும் நிலையான வைப்புக்கான கிடைத்த வட்டி ரூபா 10,500,000 நிலையான |

| | | |
|---|---|---|
| | | வைப்பாக குளியாப்பிட்டிய மக்கள் வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இப் பணத்தை சங்கங்களுக்கு விடுவிக்கப்படாமல் இருப்பதுடன் எதிர் காலத்தில் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்படும். |

**(ஊ) வடமேல் மாகாண ஜனகலா மன்றம்**

---

| | | |
|---|---|---|
| முகாமைத்துவ பணிப்பாளர், 02 உதவிப் பணிப்பாளர் பதவிகள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பதில் கடமை அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டு மீளாய்வாண்டிற்காக ரூபா 1,248,912 படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வெற்றிடமான பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் | வயம்ப ஜனகலா மன்றத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் 02 உதவிப் பணிப்பாளர் பதவிகள் காணப்பட்டன மன்றத்தின் நியதிச்சட்ட நோக்கங்களை நிறை வேற்றுவதற்காக ஆளுனரினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் 2013-12-04 ஆந் திகதி முதல் 2016.12.03 வரை 03 ஆண்டு காலப்பகுதிக்கு நிர்வாகம் மற்றும் கலாசார பதவிக்கு ஜே.ஏ.ஜகத் குமார அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் அழகியல் கலை விடயம் தொடர்பான அறிவுடன் கூடிய உத்தியோகத்தரொருவராக இருப்பதால் பணிப்பாளர் சபையினால் 2017.12.03 ஆந் திகதி முதல் உதவி பணிப்பாளர் (கலாசார) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். பணிப்பாளர் அங்கீகாரத்தின் பிரகாரம் அவருக்கு ரூபா 454,908 ஆன பதில் கடமை படிகள் வழங்கப் பட்டுள்ளது. உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவிக்காக மேலே அகற்றப்பட்ட நிர்வாகப் பதவிக்குரிய கடமைகள் கையளிக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த பதவிக்காக சேவை அனுபவம் மற்றும் வியாபார நிர்வாகம் (விஞ்ஞானமானி) பட்டதாரி |

| | | |
|---|---|---|
| | | திரு.பீ.எம்.ரீ.கே திசாநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார். உதவிப் பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம் பதவி ஒன்று எனக் கருதி பதில் கடமை படிகள் வழங்கப்பட்டு வருகின்றது. |

**(எ) வடமேல் மாகாண இயந்திர சாதன அதிகாரசபை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாடகை கட்டணங்கள், வாகன திருத்தங்கள், சேவை நிலையங்கள் மற்றும் சிவில வேலைக் கட்டணங்கள் என கிடைகக் வேண்டிய மீதிகளின் கூட்டுதொகை மீளாயவாண்டின்இறுதியில் ரூபா 72,303,791 ஆக இருந்ததுடன் அம்மீதி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்யப்படாமல் காணப்படும் மீதிகளின் பெறுமதி ரூபா 18,120,261 ஆக இருந்தது. சகல கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீண்டகால நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு தெவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கின்றேன். |

**(ஏ) வடமேல் மாகாண வீடமைப்பு மற்றும் நிர்மாண அபிவிருத்தி நிதியம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 8,775,912 ஆன மிகையினுள் நிதியத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக வீடமைப்பு மற்றும் நிர்மாணத் திணைக்களத்திடமிருந்து வழங்கப்படும் ரூபா 6,000,000 மற்றும் கூட்டுறவு மன்றத்தினால் வழங்கப்படும் ரூபா 1,000,000 உள்ளடக்கப்பட்டிருந்த போதும் எந்தவொரு செயற்திட்டதிற்காகவும் பயன்படுத்தியிருக்கவில்லை. | கிடைக்கும் நிதி ஏற்பாடுகளை நோக்கங்களை நிறை வேற்றக்கூடிய வகையில் பயன்படுத்த வேண்டும். | வீடமைப்பு மற்றும் நிர்வாகம் அபிவிருத்தி நிதியத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட போதும் எமது கட்டுப்பாட்டிலிருந்து விலகி உருவாகும் விடயங்கள் காரணமாக கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டட விடயங்கள் உருவாகியிருந்தன. |

**(ஐ) வடமேல் முதலமைச்சர் நிதியம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வடமேல் மாகாணத்தின் 1990 இன் 05 ஆம் இலக்க வடமேல் மாகாண முதலமைச்சர் நிதியத்தின் நியதிச்சட்டத்தின் கீழ் 6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் பணம்? வடமேல் மாகாணத்தினுள் வறுமையை ஒழிப்பதற்காக நிவாரணம் வழங்குவதற்காக அல்லது கல்வி அல்லது அறிவினை அதிகரிப்பதற்கு அல்லது சமய முன்னேற்றத்திற்கு சமய அனுஷ்டானமொன்றை மேற்கொள்வதற்கு அல்லது ஈடுபடத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அதற்காக எவ்வித தொகையும் முதலமைச்சர் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருக்கவில்லை. | | முதலமைச்சர் நிதியத்தின் சாசனத்தின் பிரகாரம் நிதியத்தின் நோக்கங்கள் கணக்காய்வினால் குறிப்பிடப்பட்ட நியதி களுடன் இருப்பதாக குறிப்பிடப்பிட விரும்புகிறேன் எவ்வாறாயினும், விளையாட்டு மற்றும் ஏனைய பொது மக்கள் நலன் உதவி சமூக நலன்புரி மற்றும் விளையாட்டு என்பன அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. பெரிய அளவிலான சத்திர சிகிச்சை மற்றும் தொற்றாத நோய்களுக்கான சிகிச்சை வழங்கும் போது நிதி பற்றாக்குறையுள்ள மக்களுக்கு மாகாண சபை மட்டத்தில் சலுகையொன்று வழங்குவதற்காக ஒரே நிதிய பிரதான அமைச்சின் நிதியமாகும். |

**(ஒ) வடமேல் மாகாண கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஓய்வூதிய முன்மொழிவு முறைமையின் கொடுக்கல் வாங்கல்கள் உட்பட விரிவாக கணனி மயப்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிப்பதற்கு 2010 ஆம் ஆண்டின் போது வடமேல் பயிற்சி நிறுவகத்துடன் ரூபா 672,000 இற்கு உடன்படிக்கை கைச்சாத்திட்டப்பட்டிருந்தது. இதற்காக முற்பணமாக ரூபா 168,000 தொகை 2010 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரை | குறித்த கணனி நிகழ்ச்சித் திட்டத்தினை செயற் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணனி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆரம்ப தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டின் போது பங்களிப்பு தாகை கிடைப்பனவிற்காக தகவல் உள்ளடக்கப்பட்டு வருகின்றது. 2019 ஆம் ஆண்டின் இறுதி அவில் தகவல் உள்ளடக்கும் செயற்பாடுகள் பூர்ததி |

| | | |
|---|---|---|
| இந்நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் செலுத்திய முற்பணத்தையும் மீள பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | செய்யப்பட்டு 2010 சனவரி முதல் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு தயார்படுத்தப்பட்டுள்ளது. |

**4.2 வர்த்தக முற்பணக் கணக்குகள்**

**5.2.1 புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் மூலப் பொருட்களை வழங்குதல் அடங்கலாக கைத்தொழில் வேலைத்தளங்களை உருவாக்குதல் மற்றும் அதன் நிர்வாகம் தொடர்பான முற்பணக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மீதி ரூபா 22,873,011 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 8,689,094 தொகை 7-18 ஆண்டுகளுக்கு இடைப்பட்டிருந்ததுடன் இக்கடன் மீதிகள் இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இக்கடன் மீதிகளை விரைவில்அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நீண்டகாலமாக அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 8,619,878 மீதிகள் தொடர்பாக மாகாண திறைசேரியனன் ஆலோசணை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | புடவைக் கைத்தொழில் திணைக்களம், குருணாகல் என்ற பெயரில் உள்ள ரூபா 69,216 ஆன கடன் மீதி இனங்காணப்பட்டு அதனை பூர்த்தி செய்வதற்கு 2019 கணக்கு மூலம் மேற்கொள்வதாக அறிய தருகின்றேன். |

**5. செயற்பாட்டு மீளாய்வு**

**5.1 செயலாற்றல்**

**5.1.1 அரசின் மானியம்**

மாகாண அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டிற்கு கிடைக்கப் பெற்றிருந்த நிதிஏற்பாடு மற்றும் பயன்பாடு தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | மூலாதாரம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை ரூபா மில்லியன் | குறைப்பயன்பாடு |
|---|---|---|---|---|
| | ---------------------- | ---------------------- | ---------------------- | ---------------------- |
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| (அ) | மாகாண திட்டவட்டமான மானியம் (PSDG) | 2,345.20 | 2,324.85 | 20.35 |
| (ஆ) | திட்டவட்டமான மானியம் (CBG) | 258.00 | 256.18 | 1.82 |
| (இ) | விசேட துறை அபிவிருத்தி செயற்திட்ட மானியம் (கல்வி) | 75.46 | 75.46 | - |
| (ஈ) | விசேட துறை அபிவிருத்தி செயற்திட்ட மானியம் (சுகாதாரம்) | 324.80 | 250.33 | 74.47 |
| | மொத்தம் | 3,003.46 | 2,906.82 | 96.64 |

**5.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) Thelesimia பிரிவிற்கு அனுப்பபப்படுகின்ற வுநாடநளஅயை நோயாளர்களிற்கு சிகிச்சையளிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் vein viewer ஸ்கானர் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு முன்மொழிவொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ் இயந்திரம் தற்போது வரை கொள்வனவு செய்யப்பட்டிருக்காததுடன் ரூபா 1,945,758 தொகை எந்தவொரு செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்படாமல் பல ஆண்டுகளாக பொது வைப்புக் கணக்கில் காணப்படுகின்றது. | சாத்தியமானளவு விரைவாக இயந்திரத்தை கொள்வனவு செய்வதன் மூலம் வுநாடநளஅயை நோயாளர்களிற்கு சிகிச்சையளிக்கப்பட வேண்டும். | இப் பணத்தை பயன்படுத்துவதன் மூலம் வடமேல் மாகாணத்தில் வுநாடநளஅயை நோயை தடுப்பதற்கான செயற்திட்ட அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு வடமேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிற்கு கடிதமொன்று அனுப்பபப்பட்டிருந்தது.<br><br>2019 யூன் 11 இல் நடைபெற்ற அமைச்சின் சுகாதார மற்றும் முகாமைத்துவக் குழுவில் செயற்திட்ட அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கும் அவ் அறிக்கையினை பெற்ற பின்னர் வுயடநளஅயை நோயை தடுப்பதற்காக வடமேல் மாகாண சுகாதார |

| | | | |
|---|---|---|---|
| | | | சேவைகள் பணிப்பாளரிற்கு அப் பணத்தை விடுவிப்பதற்கும் சுகாதார சேவைகள் பணிப்பாளரிற்கு நான் அறிவித்துள்ளேன் என்பதை தயவுடன் குறிப்பிடுகின்றேன். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மத்திய மாகாண போர் வீரர்கள் சிலையை நிர்மாணிப்பதற்காக ரூபா 18,697,553 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் காரணிகளினடிப்படையிலான அபிவிருத்தி மானியங்களின் கீழ் 2018 மே 11 இல் நடைபெற்ற திறப்பு விழாவிற்காக ரூபா 7,088,328 தொகை செலவிடப்பட்டிருந்தது. அச் சிலையை திறப்பதற்காக செலவிடப்பட்ட பணம் அச் சிலையை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தில் 38 சதவீதம் ஆக காணப்பட்டது. | அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் செலவினங்களை மேற்கொள்ளும் போது செயற்திறன் மற்றும் கிரயம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். | இவ் விழா தொடர்பான செலவினங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) | குருணாகல் மாவட்டத்திலுள்ள அனைத்து சுகாதார பராமரிப்பு நிறுவனங்களிற்கும் மருந்துகளை விநியோகிக்கின்ற பிரதேச மரந்தக களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்ட மருந்தின் தரத்தை பாதுகாப்பதற்காக நிறுவப்பட்ட 9 வளிப்பதனாக்கி இயந்திரங்களில் 8 வளிப்பதனாக்கி இயந்திரங்கள் பழுதடைந்து பயன்பாடற்று காணப்பட்டன. | மருந்துகளின் தரத்தை பாதுகாப்பதற்கு அனைத்து களஞ்சியங்களிற்கும் வளிப்பதனாக்கியை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதான மருந்துக் களஞ்சியங்களிலுள்ள விளைவற்ற அனைத்து வளிப்பதனாக்கி இயந்திரங்களையும் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 14 வாகனங்கள் அலுவலக | சாத்தியமானளவு விரைவாக இவ் வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் | 2015 ஆம் ஆண்டிலிருந்து அகற்றுவதற்காக இனங்காணப்பட்ட 14 பயன்படுத்தப்பட முடியாத வாகனங்கள் தொடர்பான |

| | | | |
|---|---|---|---|
| | வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அவை இயற்கை காரணங்களினால் மோசமடைந்துள்ளன. | எடுக்கப்பட வேண்டும். | தகவல்கள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிற்கு இரண்டு தடவை அனுப்பப்பட்டுள்ளது. |
| (உ) | பிரதம அமைச்சால் 2017 ஆம் ஆண்டில் நுளம்பு பெருகுவதை இழிவுபடுத்துவதற்காக 1650 அழளஙரவைழ டயசஎய வசயிள ஐ கொள்வனவு செய்வதற்காக ரூபா 825,000 செலவிட்டு ஆரம்பிக்கப்பட்ட விசேட புலனாய்வுச் செயற்திட்டம் வெற்றியளித்திருக்காததுடன் அப் பணம் பயன்பாடற்ற செலவினம் ஆகியிருந்தது. | ஒத்துழைப்பு தொடர்பான தொழில்நுட்ப தவறுகளை சீர்செய்வதன் மூலம் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆரம்பச் செயற்திட்டமாக இது உள்ளதால் அழளஙரவைழ டயசஎய வசயிள ஐ சீர்செய்வதன் மூலம் அவற்றிலுள்ள தொழில்நுட்பத் தவறுகளின் புலனாய்விற்கு சுகாதார அமைச்சு உதவி செய்யத் தவறியமைக்கும் அவை அமுல்ப்படுத்தப்படுவதற்கு பயன்படுத்தப்படக்கூடிய நிலையில் உள்ளனவா என பரீட்சிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகங்கள் அமைந்துள்ள 33 காணிகளை திணைக்களத்திற்கு உரிமைமாற்றம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமை மாற்ற நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். | வைத்தியசாலைகள் மற்றும் மத்திய மருந்தகங்கள் அமைந்துள்ள காணிகளை மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு உரிமைமாற்றம் செய்யும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. |
| (எ) | மாகாண சபையின் அமைச்சுக்கள், பிரதம செயலாளர் அலுவலகம், திணைக்களம், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 26 நிறுவனங்களின் ஊழியர்கள் இடமாற்றம்பெற்றுச் சென்றமை, இறந்தமை, பதவி விலகியமை, ஓய்வு பெற்றமை மற்றும் ஏனைய காரணங்களினால் தீர்ப்பனவு செய்யப்படாத ஊழியர் கடன் மீதிகளின் கூட்டுமொத்த தொகை ரூபா 44,311,446 ஆக காணப்பட்டது. | 2014 ஒக்தோபர் 11 அம் திகதிய தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் 118 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இடமாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர்களின் கடன் மீதி 3 மாதங்களினுள் அறவிடப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.<br><br>உரிய தகவல்கள் காணப்படாதமை காரணமாக சில கடன் மீதிகள் அறவிடப்பட முடியாதிருந்ததுடன் விசேட காரணங்களினால் நீண்டகால கடன் மீதிகள் காணப்பட்டன. பல தடவைகள் அவ் ஊழியர்களிற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த போதிலும் மீதிகளுடன் பொருந்தாததன் காரணமாக அக் கடன் மீதிகளை அறவீடு செய்வது மிகவும் சிக்கலானதாக காணப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | வட மேல் மாகாண சபையில் உள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள், பிரதேச செயலக அலுவலகங்கள் உள்ளடங்கலாக 8 நிறுவனங்களிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிற்குரிய கடன் மீதிகளின் ரூபா 25,092,756 மொத்த தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2014 ஒக்தோபர் 11 அம் திகதிய தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் 118 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கடன்களை தீர்ப்பனவு செய்வதற்காக கடன் மீதிகளை நியாயப்படுத்துவதற்கு உரிய நிறுவனங்களிற்கு கடன் உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. பொருந்தாத கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்யும் போது பிரச்சனை காணப்படுகின்றதுடன் அவற்றை சீர்செய்வதன் மூலம் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஐ) | முந்தலம் மாவட்ட வைத்தியசாலையில் ரூபா 810,169 பெறுமதியான மருந்துப் பற்றாக்குறைகள் மற்றும் ரூபா 19,943 பெறுமதியான மருந்து மிகைகள் காணப்பட்டதென 2018 யூலை 02 ஆம் திகதிய புலனாய்வுச் சபை அறிக்கை மூலம் வெளிப்படுத்தப் பட்டிருந்தது. | இவ் மருந்து பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இவ்விடயத்தை புலனாய்வு செய்த பின்னா பதிலளிக்கப்படும். |
| (ஒ) | தகவல் தொழில்நுட்பமொன்றை தயாரிப்பதற்கு மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியங்களின் கீழ் ரூபா 7,500,000 தொகை மதிப்பிடப்பட்ட போதிலும் அச் செயற்திட்டத்திற்காக வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கான முறைமை மற்றும் சாத்தியவள ஆய்வு அறிக்கை என்பன சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் மதியுரைக் கட்டணமாக மாத்திரம் ரூபா 1,500,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்வதற்கான மதியுரையின் பிரகாரம் செயற்திட்டத்தை வினைத்திறனாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். செயற்திட்ட தொழிற்பாடுகளின் பின்னுட்டலை பெறுவதன் மூலம் செயன்முன்னேற்றம் மதிப்பிடப்பட வேண்டும். | அத்தகைய செயற்திட்டத்தின் சாத்தியவள அறிக்கையை புலனாய்வு செய்வதன் மூலம் கூட்டிணைவாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் நிதி ஆணைக்குழுவிற்கு அறிவித்ததன் பின்னர் உரிய நிதியேற்பாடுகளை பெற்று செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பிரகாரம் கூறு (அழனரடந) தயாரிக்கப்பட்டு அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் முறையாக அமுல்ப்படுத்தப்படுகின்றதா என்பதை பரீட்சிப்பதற்கு அதிகாரிக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஓ) | வீதிப் போக்குவரத்து, வீடமைப்பு மற்றும் நிர்மாணக் கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சால் இயலளவைக் | ஒட்டுமொத்த நோக்கங்களை பூர்த்தி செய்வதற்கு பயிற்சி நிகழ்வுகள் நடாத்தப்பட வேண்டும். | அமைச்சு மற்றும் உரிய திணைக்களங்களில் உள்ள அனைத்து 690 உத்தியோகத்தர்களையும் தொடர்புபடுத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை |

| | | |
|---|---|---|
| கட்டியெழுப்புதல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட இரண்டு பயிற்சி நிகழ்வுகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 468,725 தொகை செலவிடப்பட்டிருந்தது. அமைச்சிலுள்ள 690 உத்தியோகத்தர்கள் இதன் கீழான அபிவிருத்திகளிற்காக காணப்பட்ட போதிலும் ஒரு நிகழ்விற்காக 52 நபர்களும் ஏனைய நிகழ்விற்காக 61 நபர்களும் அந் நிகழ்வுகளிற்காக பங்குபற்றியிருந்தனர். | | நடாத்துவது நடைமுறையில் சிக்கலான செயற்பாடாக காணப்பட்ட போதிலும் முன்னுரிமையை வழங்குவதன் மூலம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் அவர்கள் அனைவரும் பங்குபற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

## 5.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 01 மாதம் தொடக்கம் 192 மாதங்கள் வரை நோயாளர்களிற்கு சிகிச்சையளிப்பதற்காக வழக்கமாக தேவைப்பட்ட 14 வகையான மருந்துகளில் பற்றாக்குறை காணப்பட்டதுடன் ழீனு நோயாளர்கள் மருந்தகங்களில் அவ் மருந்துகள் காணப்படாததன் காரணமாக தனியார் மருந்தகங்களிலிருந்து 24 வகையான மருந்துகளை கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. | எந்தவொரு பற்றாக்குறையும் இல்லாமல் நோயாளர்களிற்கு வழமையாக தேவைப்படுகின்ற மருந்துகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எங்களிற்கு மருந்துகளை பெற்றுக்கொள்வதில் உள்ள தாமதம், மருந்தக கூட்டுத்தாபனத்திடமிருந்து சில வகையான மருந்துகள் கோரப்பட்டிருந்த போதிலும் கோரப்பட்ட தொகைகளில் அம் மருந்துகள் பெறப்படாமை மற்றும் நிலவுகின்ற வரையறுக்கப்பட்ட நிதியேற்பாடுகளை அடிப்படையாக கொண்டு அம் மருந்துகளை கொள்வனவு செய்தல் காரணமாக அனைத்து ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் மத்திய மருந்தகங்களில் இது காணப்படுவதால் மருந்துத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு இயலாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.<br><br>அவ் வைத்தியசாலைகளில் மருந்துகளை பதிலீடு செய்து நோயாளர்களின் சிகிச்சை செயற்பாடுகள் தொடர்ச்சியாக பேணப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| | | | ‘‘ஜயதிலக ரசய’’ மற்றும் ‘‘திவ்யங்கன தைலய’’ என்பன தற்போது பயன்படுத்தப்படுவதில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | முந்தலம மாவட்ட வைத்தியசாலையில் காலாவதியான 88 வகையான மருந்து இருப்பில் 49 வகையான மருந்துகளின் பெறுமதி 2018 ஆம் ஆண்டில் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் 49 வகையான மருந்து இருப்புக்களிற்குரிய விலைகள் சமர்ப்பிக்கப்படாத அதன் பெறுமதி ரூபா 634,213 ஆக காணப்பட்டது. காலாவதியாவதற்கு முன்னர் தேவையான வைத்தியசாலைகளிற்கு அம் மருந்துகளை வழங்குவதன் மூலம் கழிவுகளை இழிவாக்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | காலாவதியாவதற்கு முன்னர் அம் மருந்துகள் தேவைப்படுகின்ற வைத்தியசாலைகளிற்கு அவற்றை வழங்குவதன் மூலம் கழிவுகள் இழிவாக்கப்பட வேண்டும். | இவ் விடயத்தை ஆராய்ந்து பின்னர் பதில்கள் வழங்கப்படும். |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குருணாகல் மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவகத்தின் 48 நிறுவனங்களில் ரூபா 9,694,079 பெறுமதியான 439 காலாவதியான மருந்து அலகுகளும் ரூபா 2,600,204 பெறுமதியான 124 தரமற்ற மருந்து அலகுகளும் காணப்பட்டன. | காலாவதியாவதற்கு முன்னர் தேவையான ஏனைய வைத்தியசாலைகளிற்கு மருந்துகளை வழங்குவதற்கும் முறைமைப்படுத்தப்பட்ட இருப்புக் கட்டுப்பாட்டு முறைமையை பின்பற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மருந்துகள் காலாவதியாவதை தடுப்பதற்கு மருந்தாளர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் ஆதார வைத்தியசாலைகள் உள்ளடங்கலாக சில நிறுவனங்களில் காலாவதியான மருந்துகளை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | எதிர்பார்க்கப்பட்ட பசுக்களை அதிகரிப்பதற்காக மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியங்களின் கீழ் ரூபா 7.6 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா | செயற்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செயற்திட்ட செயற்பாடுகள் | செயற்திட்டத்தின் பிரகாரம் விலங்குகளை கொள்வனவு செய்து இயல்பாக வைத்திருப்பதற்கு பண்ணையில் இடமொன்று காணப்படாததன் காரணமாக இடமொன்றை |

| | | | |
|---|---|---|---|
| | 6,607,430 தொகை 2018 ஆம் ஆண்டிற்காக செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் திட்டமிடப்பட்டவாறு மாட்டுத் தொழுவங்கள் அமைக்கப்பட்டிருக்காததுடன் விலங்குகள் எதுவும் விற்பனைக்கு தயாராக இருக்கவில்லை. | முறையாக அமுல்ப்படுத்தப்பட வேண்டும். | அமைக்கும் வரை 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை கன்றுகளை கொள்வனவு செய்தல் பிற்போடப்பட வேண்டியிருந்தது. கேள்வி கோருவதன் மூலம் மாட்டுத் தொழுவங்களை அமைப்பதற்கும் ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்வதற்கும் அதிக காலம் எடுப்பதன் காரணமாக விலங்குகளை கொள்வனவு செய்ய முடியாதிருந்ததென குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (உ) | சிறிய மற்றும் நடுத்தரளவு பால் பண்ணைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 8,906,482 நிதியேற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 8,374,882 தொகை அதற்காக செலவிடப்பட்டிருந்தது. ரூபா 2,631,935 தொகை அதாவது செயற்திட்டத்தின் கீழ் 50 சதவீதமான அரச பங்களிப்புக்கள் வழங்கப்பட்டிருந்த 55 பயனாளிகள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வின் போது பால் உற்பத்தி அதிகரித்திருக்காதமை அவதானிக்கப்பட்டதுடன் இளம் விவசாயிகள் பசு வளர்ப்பில் ஈடுபட்டிருக்கவில்லை. மாட்டுத் தொழுவங்களின் நிர்மாணம் மற்றும் 5 பால்கறக்கும் உபகரணங்கள் என்பவற்றிற்காக நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 417,500 தொகை செலவிடப்பட்டு 6 கமநல சேவைகள் நிலையத்திலுள்ள 8 பயனாளிகளிற்கு நிர்மாணிக்கப்பட்ட 3 மாட்டுத் தொழுவங்கள் | பொருளாதார அபிவிருத்திக்காக உபகரணங்கள் மற்றும் மாட்டுத் தொழுவங்களை வழங்குவதன் பங்களிப்புக்களை உடனடியாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | தனிப்பட்ட பிரச்சனைகள், அனர்த்தங்கள், பால் மறக்கச் செய்தல் மற்றும் எதிர்பார்ப்புக்கள் காரணமாக உபகரணங்கள் மற்றும் மாட்டுத் தொழுவங்கள் பயன்படுத்தப்பட முடியாதிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | பிஎஸடிஜீ இன் கீழ் வட மேல் மாகாணத்திலுள்ள பிரதேச செயலக பிரிவுகள் அனைத்திற்கும் ''நிவஹன'' வீடமைப்பு உதவிகளை வழங்குவதற்கான ரூபா 3,000,000 நிதியேற்பாடுகளில் 75 நபர்களிற்கு ஒவ்வொன்றும் ரூபா 40,000 தொகை வீதம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் எந்தவொரு அடிப்படையும் இன்றி 138 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக முழுமையான மானியத் தொகையை மக்களிற்கு வழங்க முடியாதிருந்தது. 16 நபர்களிற்கு மாத்திரமே முழுமையான மானியத் தொகையை வழங்க முடிந்திருந்ததுடன் ஏனைய அனைத்து நபர்களிற்கும் ஒரு பகுதியே வழங்கப்பட்டிருந்தது. | பயனாளிகளின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதற்காக வேலையின் ஒரு பகுதியை பூர்த்தி செய்வதற்குப் போதுமான மானியத் தொகை வழங்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்பட்டவாறு காலக்கிரமத்தில் கட்டுநிதி பெறப்படாதமை மற்றும் முதலாம் தவணையில் மானியங்களை பெற்றிருந்த பயனாளிகளால் நிர்மாண நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றத்தை சமர்ப்பிப்பதில் காணப்பட்ட தாமதம் மற்றும் விண்ணப்பங்களுடன் தேவைப்பாடுகள் மற்றும் வரையறைகளை பூர்த்தி செய்திருந்த அதிகமான மக்களிற்கு நன்மைகள் வழங்கப்பட வேண்டியிருந்தமை என்பன காரணமாக இந் நிலைமை ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதென பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (எ) | ஆபத்தான பகுதிகளில் அமைந்துள்ள சுகாதார பராமரிப்பு சேவை அலுவலகங்களில் போதுமான இரசாயனவியல் வசதிகள் காணப்படாதமை, கிட்னி நோய்களை தடுப்பதற்கு போதியளவு மானிய நிதியேற்பாடுகள் காணப்படாதமை மற்றும் ஆண்டின் ஆரம்பத்தில் நிதியேற்பாடுகள் பெறப்படாதமை, மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் தூய குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் காணப்படாதமை மற்றும் குருணாகல் மாவட்டத்தில் பரவுகின்ற கிட்னி நோயை தடுக்கும் | ஆபத்தான பகுதிகளில் அமைந்துள்ள சுகாதார சேவை நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளங்களை முன்னேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு கிட்னி நோய்களை தடுக்கும் தேசிய பிரிவிடமிருந்து தேவையான நிதியேற்பாடுகள் பெற்றுக்கொள்வதற்கு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வேண்டுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செல்வாக்குச் செலுத்தியிருந்த கிட்னி நோயாளர்களில் அதிகமானவர்கள் காணப்படுகின்ற பொல்பிதிகம மாவட்ட வைத்தியசாலையில் போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படாதமை என்பன அவதானிக்கப்பட்டன. | | |
| (ஏ) | சிலாபம் கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளில் 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.்.த) பரீட்சைக்காக தோற்றியிருந்த 3,664 மாணவர்களில் 1,178 மாணவர்கள் சித்தியெய்தியிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (சா.்.த) பரீட்சைக்காக தோற்றியிருந்த சிலாபம் கல்வி வலயத்தின் சித்தியெய்தாத ஒட்டுமொத்த சதவீதம் 35 சதவீதமாக காணப்பட்டதுடன் ஆராய்ச்சிக்கட்டுவ பிரிவில் சித்தியெய்தாத சதவீதம் 50 சதவீதமாக காணப்பட்டது. | சித்தியெய்தாத சதவீதத்தை இழிவுபடுத்துவதற்கு முறைமைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். | 2016 ஆம் ஆண்டில் சித்தியெய்தாத சதவீதம் 39 சதவீதமாக காணப்பட்டதுடன் இது 2017 ஆம் ஆண்டில் 7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. |

## 5.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண வீடமைப்பு மற்றும் நிர்மாண திணைக்களத்தின் ஏற்பாட்டின் கீழ் வடமேல் பொறியியல் திணைக்களத்தின் மூலம் ரிதிகம – கொடுகென சமூக நிலையத்தின் நிர்மாணத்திற்காக ரூபா 2,495,396 பெறுமதியான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. மொத்த வேலையிலிருந்து 19 சதவீதத்தினை மாத்திரம் பூர்த்தியாக்குவதன் மூலம் 2019 சனவரி இல் உள்ளவாறு நிர்மாண செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தது. | தொடர்புடைய திணைக்களத்தின் செயற்திட்டங்கள், ஏற்பாடுகளினை ஒதுக்கீடு செய்த பின்னர் திட்டங்களின் பிரகாரம் வேலையினைப் பூர்த்தியாக்குவதன் மூலம் பொது மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படல் வேண்டும். | அதனை ஏற்றுக்கொள்கிறேன். |

### 5.5 செயற்திட்டங்களினை அமுல்படுத்தல்

### 5.5.1 முறையான வகையொன்றின் மூலம் கையளிக்கப்பட்டிராத காணி / ஆதனத்தில் செயற்திட்டங்களினை ஆரம்பித்தல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உணவகத்திற்காக பொருத்தமான இடமொன்று பெறப்படவேண்டியதுடன் சட்டரீதியான உரிமைத்துவம் 5 வருடங்களுக்கும் அதிகமாக பெறப்பட வேண்டிய போதிலும், பரீட்சிக்கப்பட்ட 9 உள்ளூர் உணவகங்களின் சட்டரீதியான உரிமைத்துவம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அந்தக் காணிகள் தொடர்பில் சட்டரீதியான உரிமைத்துவத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | உள்ளூர் உணவகங்கள் நடாத்தப்படுகின்ற காணிகளின் உரிமைத்துவத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |

### 5.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 5.6.1 விளைவற்ற / குறைபயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதார வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகள், சுகாதார பராமரிப்பு நிலையங்கள் மற்றும் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான ஆரம்ப மருத்துவ சிகிச்சை பிரிவுகளுக்குச் சொந்தமான 38 விடுதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டிருந்தது. | அவற்றை திருத்தஞ் செய்வதன் மூலம் அந்த விளைவற்ற விடுதிகளினை கையளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் இந்த விடுதிகளினை திருத்தஞ் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றது. |
| (ஆ) | களுவலகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 5,000,000 செலவழிப்பதன் மூலம் 2014 இல் நிர்மாணிக்கப்பட்ட ‘‘நீலபிம்மா சுற்றுலா விடுதி’’ நிர்மாணித்த ஆண்டிலிருந்து விளைவற்ற வகையில் காணப்பட்டிருந்ததுடன் ரூபா 10,000,000 மற்றும் ரூபா 3,000,000 செலவழிப்பதன் மூலம் | வாராந்த சந்தைக் கட்டிடங்களினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | நீலபிம்மா சுற்றுலா விடுதியினை வாடகைக்குவிடுவதற்கு மற்றும் அந்த இடத்திற்கு வர்த்தகர்கள் வருகை தராமை காரணமாக, அந்த கட்டிடத்தில் வாராந்த சந்தையை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | 2014 இல் நிர்மாணிக்கப்பட்ட வாராந்த சந்தைக் கட்டிடம் 1 தொடக்கம் 2 வருடங்கள் வரை விளைவற்ற வகையில் காணப்பட்டிருந்தது. | | எடுக்கப்படுகின்றன. |
| (இ) | புடைவைகள் திணைக்களத்தின் ஜனசலு நிலையங்களில் பல்வேறுபட்ட வகைகளில் ரூபா 1,139,607 பெறுமதியான பயன்படுத்தப்படாத நூல் இருப்புக்கள் காணப்பட்டன. | இருப்புக்களினை தேவையற்ற விதத்தில் சேகரித்திருந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | அந்த நூல்களின் இருப்பு ஞாயிற்றுக்கிழமை பாடசாலை களஞ்சியங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவை கட்டளைகளினைப் பெறாது காணப்படுகின்றன. |
| (ஈ) | வாரியபொல அரச பண்ணைப் பிரதேசத்தில் 2016 இல் ரூபா 808,830 இனைச் செலவழிப்பதன் மூலம் மற்றும் மின்சாரம் மற்றும் ரூபா 796,112 பெறுமதியான உபகரணங்களை வழங்குவதன் மூலம் உள்ளூர் உணவகத்திற்கான கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அது 2018 நவம்பர் இல் உள்ளவாறு மூடப்பட்டிருந்தது. | விளைவற்ற சொத்துக்கள் பொருளாதார அபிவிருத்திக்காகப் பயன்படுத்தபடல் வேண்டும். | இந்த உணவகத்தின் பராமரிப்புக் கிரயம் அதிகரித்திருந்தமை மற்றும் இதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைப்பெறாமை காரணமாக மூடப்பட்டிருந்தது. |

**5.7 பதவியணியினர் நிர்வாகம்**

**5.7.1 மாகாண சபையின் பதவியணியினரை தாபித்தல் (கல்வி மற்றும் சுகாதாரம் தவிர)**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | முறையானதொரு இடமாற்ற முறைமையொன்றை அமுல்ப்படுத்தாமை காரணமாக, கூட்டுறவுத் திணைக்களத்தின் கூட்டுறவு மேற்பார்வையாளர்கள் உள்ளடங்களாக 56 உத்தியோகத்தர்கள் 6 தொடக்கம் 30 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு | முறையானதொரு இடமாற்ற முறைமையொன்றை அமுல்ப்படுத்துவதன் மூலம், அந்தப் பிரதேசசத்தில் வசிக்கின்ற ஏனைய உத்தியோகத்தர்கள் அந்த அலுவலகங்களில் பணிபுரிவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். | பிரதேசத்திற்கு வெளியிலுள்ள கூட்டுறவு சங்கங்களின் மேற்பார்வையாளர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருக்காத போதிலும்கூட அவர்களினை வருடாந்தம் கண்ககாய்வு செய்து கூட்டுறவு சங்கங்களுக்கிடையே மாற்றஞ் செய்வதன் மூலம் அவர்களின் |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | குளியாப்பிட்டிய உதவி ஆணையாளரின் அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்தனர். | | சேவை பெறப்படுகின்றமை இங்கு குறிப்பிடப்படல் வேண்டும். |
| (ஆ) | வடமத்திய மாகாணத்தில் காணப்படும் அங்கீகரிக்கப்பட்ட 14 வெற்றிடமாகவுள்ள பதவிகளுடன் தொடர்புடைய கடமைகளினை மேற்கொள்வதற்கு பிரதம செயலாளர் அலுவலகம் 36 ஓய்வு பெற்ற ஊழியர்களினை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. | ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | ஆட்சேர்ப்பு செயன்முறையில் குறிப்பிடப்பட்ட தகைமைகளின் பிரகாரம் தகைமைவாய்ந்த விண்ணப்பதாரர்கள் காணப்படாமை காரணமாக ஓய்வு பெற்ற நபர்களினை ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டிக் காணப்பட்டது. |

**5.7.2 கல்விசார் ஊழியர்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 5 வலயக் கல்வி அலுவலகங்களில் 24 ஆசிரியர்களின் நியமனங்கள் பல்வேறு அடிப்படையில் நிரந்தரமாக்கப்பட்டிருக்காகததுடன் பல ஆசிரியர்களின் நியமணத்திற்கான காரணங்கள் மற்றும் 28 வருடங்கள் கடந்திருந்த போதிலும்கூட நிரந்தரமாக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவள முகாமைத்துவ தொழிற்பாடுகளினை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கு கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். | (i) கிரியுல்ல வலய அலுவலக உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளினை கண்டறியத் தவறியமை.<br><br>(ii) மகாவ, குளியாப்பிட்டி மற்றும் நிக்கவரட்டிய வலய அலுவலகங்களிலிருந்து தேடுவதன் மூலம் பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படுமென குறிப்பிடுகின்றேன். |
| (ஆ) | கல்வி அமைச்சு செயலாளரின் 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றிக்கையிலுள்ள 3.2 ஆம் பந்தியின் பிரகாரம், அதிக வசதியாகவுள்ள பாடசாலைகளில் அதிகபட்சம் சேவைக் காலப்பகுதி 6 வருடங்களாகக் காணப்பட்ட போதிலும், 4 கல்வி வலயங்களில் 7 தொடக்கம் 34 வருடங்கள் வரை அதே பாடசாலைகளில் கடமை புரிந்த 1,475 ஆசிரியர்கள் அங்கு | கல்வி அமைச்சு செயலாளரின் 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2017/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | (i) கிரியுல்ல வலய அலுவலகத்திலுள்ள 32 ஆசிரியர்கள் இடமாற்றப்பட்டிருக்கின்றதுடன் 55 வயதினை மிகைத்திருக்கின்ற 65 ஆசிரியர்கள் தொடர்பில் சுற்றறிக்கையின் பிராகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அடுத்து வரும் ஆண்டில் 201 ஆசிரியர்களினை இடமாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டமை மாதிரிப் பரீட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | | (ii) மகாவ, குளியாப்பிட்டி மற்றும் நிக்கவரட்டிய வலய அலுவலகங்களில் புலனாய்வுகளினை மேற்கொள்வதன் மூலம் பதிலை பின்னர் சமர்ப்பிப்பேன் என அறிவித்துக்கொள்கிறேன். |
| (இ) | தாபனக்கோவையின் V ஆம் பந்தியின் 2.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், அரச சேவையில் பதவியொன்று வகிக்கின்ற ஊழியர்களிலொருவர் 2 வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதிக்கு மற்றுமொரு சேவைக்கு விடுவிக்கப்படக்கூடாத போதிலும், வடமேல் மாகாணத்திலுள்ள 4 கல்வி வலயங்களுடன் தொடர்புடைய 24 ஆசிரியர்கள் முப்படையிலுள்ள தற்காலிக படையின் செயற்பாட்டு சேவைக்காக விடுவித்தன் மூலம் 2 வருடங்கள் காலப்பகுதியினை பூர்த்தி செய்த பின்னர் மீண்டும் ஆசிரியர் சேவையில் இணைத்திருக்கவில்லை. அத்துடன் 1993 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை வடமேல் கல்வித் திணைக்களத்தினால் அந்த 24 ஆசிரியர்களுக்காக ரூபா 61,136,131 மொத்த தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | தாபனக்கோவையின் V ஆம் பந்தியின் 2.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | (i) தொடர்புடைய அங்கீகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றதுடன் மீளாய்வு செய்யப்பட வேண்டிய சம்பளத்துடன் தொடர்புடையவைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும்.<br><br>(ii) மஹாவ, நிக்கவரட்டிய மற்றும் குளியாப்பிட்டி வலய அலுவலகங்களிடமிருந்து புலனாய்வுகளினை மேற்கொள்வதன் மூலம் பதில் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டுமென குறிப்பிடுகின்றேன். |
| (ஈ) | போதனாசிரியர்களாக வடமேல் மாகாணத்திலுள்ள 8 கல்வி வலயங்களில் 479 ஆசிரியர்கள் இணக்கப்பட்டமை காரணமாக, அந்தப் பாடங்களுக்காக பாடசாலைகளில் வெற்றிடங்கள் ஏற்பட்டுடிருந்ததுடன் அந்த வெற்றிடங்கள் நிரந்தரமான உழியர்களுக்கு அல்லது அந்த தொடர்புடைய பாடசாலைகளுக்குச் சொந்தமானதாகக் வெற்றிடங்கள் காணப்பட்டதிலிருந்து அந்த | அந்த நியமனங்கள் முறைப்படுத்தபட்ட நியமனமொன்றாகக் காணப்படாமையினால் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு எவ்வித இடையூறுமின்றி போதனாசிரியர்கள் பணிபுரிய வேண்டும். | கணக்காய்வினால் வழங்கப்பட்ட தகவல் சரியானது என நான் ஏற்றுக்கொள்கின்றேன், ஆனால் ஐஎஸ்ஏஎஸ் இன் நியமனங்கள் மற்றும் தாபிப்புக்கள் மாகாண திணைக்களத்தினால் செய்யபட்டன. அவர்களின் சேவை முகாமைத்துவ திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்டு காணப்படாமை அவதானிக்கப்படுகின்றதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடங்களினை நிறப்ப முடியாதிருந்தது. | | இணைப்பொன்று மாத்திரம் செய்யமுடியுமாகக் காணப்படுகின்றதுடன் அவர்களின் நிரந்தரமான சேவை நிலையம் பாடசாலையாகக் காணப்படக் கூடும். |

**5.8 பெறுகை**

**5.8.1 பெறுகைத்திட்டம்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 3 வருடங்களுக்காக எதிர்பார்க்கப்படும் பெறுகை பணிகளினைக் குறிப்பிடுகின்ற பிரதான பெறுகைத் திட்டம், பெறுகை வழிகாட்டலின் 4.2.1 (அ) பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் பிரதம செயலாளரின் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் 3 வருடங்கள் காலப்பதிக்கான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். | பிரதம செயலாளர் அலுவலகத்திற்கான பெறுகைத் திட்டம் முன்னைய ஆண்டிலிருந்து இதுவரை ஒரு வருடத்திற்காக மாத்திரம் தயாரிக்கின்றதுடன் எதிர்காலத்தில் 3 வருடங்களுக்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுமென தயவுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டலிலுள்ள 4.2 (இ) பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய பெறுகைத் திட்டம் 2018 ஆம் ஆண்டிற்காக கிரியுல்ல, குளியாப்பிட்டி, நிக்கவரட்டிய மற்றும் மஹாவ வலயக்கல்வி அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டலிலுள்ள 4.2 (இ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கிரியுல்ல, வலய அலுவலகம் 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கையினை எடுத்துள்ளது. மஹாவ, நிக்கவரட்டிய மற்றும் குளியாப்பிட்டி வலய அலுவலகங்களில் புலனாய்வுகளினை மேற்கொண்ட பின்னர் பதில்கள் சமர்ப்பிக்கப்படுமென குறிப்பிடுகின்றோம். |
| (இ) | வீதிகள், போக்குவரத்து, வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கிராமிய அபிவிருத்தி விவகாரங்கள் மற்றும் விநியோகங்களும் சேவைகளும், பெறுகை செயற்பாடுகளுக்காக அமைச்சுக்கு மீளாய்வாண்டில் வருடாந்தம் மதிப்பீட்டிலிருந்து ரூபா 13,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் பெறுகைத் திட்டத்தில் அது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் மதிப்பீட்டிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து மூலதன அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். | இதனுடன் தொடர்புடையவற்றை புலனாய்வு செய்வதன் மூலம் பதில்கள் பின்னர் சமர்ப்பிக்கப்படும். |

### 5.8.2 வேலை விநியோகங்களும் சேவைகளும்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஐ.ரீ.பீ கேள்விமனு ஆவணத்தின் 31 ஆவது உபகூற்றின் 4.4 ஆவது ஒப்பந்த நிபந்தனை மற்றும் அந்தப் பெறுகையினை பாதுகாக்கும் விடயத்துடன் தொடர்புடைய 5.4.8 ஆம் பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்த பணத்திலிருந்து 5 சதவீதத்னை விடக்க குறையாத செயலாற்றல் பிணையொன்று மேறகொள்ளப்பட வேண்டிய போதிலும், ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்த உடன்படிக்கையினை மீறி, குருநாகல் கிராமிய பொறியியல் அலுவலகம் செயலாற்றல் பிணைகளினை நீடிப்புச் செய்திராது 9 ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்த காலப்பகுதியினை நீடிப்புச் செய்திருந்தனர். | ஐ.ரீ.பீ கேள்விமனு ஆவணத்தின் 31 ஆவது உப கூற்றின் 4.4 ஆவது ஒப்பந்த நிபந்தனை மற்றும் பெறுகை வழிகாட்டலின் 5.4.8 பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். | இந்த விடயம் தொடர்பில் பதில்கள் சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) | 2016 பெப்ரவரி 16 ஆந் திகதிய அரச நிதித் திணைக்களத்தின் பிஎவ்டீ/பிஎம்டீ/சீஎல்ஏ/02/வீஓஎல்.ii ஆம் இலக்க கடிதம் மற்றும் பெறுகை வழிகாட்டல் 5.4.4 இன் பிரகாரம் கே/சென் அன்னை மகா வித்தியாலயத்திற்கு கணனி அலகுடனான 4 மாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டிடத்தின் நிர்மாணம் மற்றும் கிரி/வென்நொருவ மகா வித்தியாலயத்தின் தொழில்நுட்ப கட்டிடத்தின் நிர்மாணம் தொடர்பில் ஒப்பந்த பணித்திலிருந்து முற்பணமாக 20 சதவீத அதிகூடிய தொகை செலுத்த முடியுமாகக் காணப்பட்டதுடன், அந்த தொகையினை மிகைத்து 30 சதவீதம் முற்பணமாக ஒப்பந்தக்காரர்களுக்கு முறையே ரூபா 5,185,275 மற்றும் ரூபா 5,900,097 காசு செலுத்தப்பட்டிருந்தது. | 5.4.4 ஆம் பெறுகை வழிகாட்டல் மற்றும் 2016 பெப்ரவரி 16 ஆந் திகதிய அரச நிதித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பிஎவ்டீ/பிஎம்டீ/சீஎல்ஏ/02/வீஓஎல்.ii ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் | இந்த விடயத்தினை உற்று நோக்கிய பின்னர் எதிர் காலத்தில் பதில்கள் சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பெறுகை வழிகாட்டலின் 5.4.6 ஆம் பிரிவுக்கு எதிராக 5 பாடசாலைகளுடன் தொடர்புடைய ஒப்பந்த செலுத்துகைகளில் ரூபா 5,783,934 பிடிகாசு பேணப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டலின் 5.4.6 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | புலனாய்வுகளினை மேற்கொண்ட பின்னர் எதிர்காலத்தில் பதில்கள் சமர்ப்பிக்கப்படும். |

## 6. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்.

### தீர்ப்பனவு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மார்ச் 26 இல் நடாத்தப்பட்ட மாகாண COPA தீர்மானத்தின் பிரகாரம், 3 மாதங்களுக்குள் வடமேல் கைத்தொழில் சேவைகள் பணியகத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,480,000 பணம் சேகரிக்கப்பட வேண்டிய போதிலும், தொடர்புடைய விநியோகத்தரிடமிருந்து மாத்திரம் பணம் சேகரிக்கப்பட்டமை காரணமாக, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 231,667 காசு மேலும் சேகரிக்கப்பட வேண்டியுள்ளது. | COPA இன் கட்டளைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | தாமதமொன்று ஏற்பட்டிருந்தமையை ஏற்றுக்கொள்கிறோம். குறுகிய காலப்பகுதிக்குள் பாரிய தொகைப் பணமொன்றை செலுத்துவது சாத்தியமற்றதாகக் காணப்படுகின்றமை இந்த தாமதத்திற்கான காரணமாகக் காணப்படுகின்றது. |
| (ஆ) | தலைமை அமைச்சின் கீழ் பிரதான முற்பண செயற்பாடொன்றாக விஸ்கம் இல்லத்தின் பராமரிப்புக்காக பல ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட ரூபா 7,038,211 முற்பண பணம் தீர்ப்பனவு செய்யப்படாத செலவின மீதியொன்றாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மீதியொன்று கீழ் கொண்டுவரப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | இந்த முற்பண பணம் ரூபா 7,038,211 இனை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது திறைசேரி கணக்குகளில் காட்டப்பட்ட இந்த மீதிகளினை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | பொது காசுப் புத்தகத்திலிருந்து தொடர்புடைய ஆண்டுகளில் பெறப்பட்ட அனைத்து கட்டுநிதிகளினையும் செலவழிப்பதன் மூலம் ஒட்டுமொத்த மீதியினையும் தீர்ப்பனவு செய்யப்பட்டமை காரணமாக, காசில் தீர்ப்பனவு செய்வதற்கு எவ்வித காசு மீதியும் காணப்படவில்லை என்பதை குறிப்பிடுகின்றேன். 1993 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய பதிவேடுகளினை தற்போது கண்டுபிடிப்பது கடினமாகக் காணப்படுகின்றதுடன் நிதி தவறான கையாடலொன்று இடம்பெறாமை அல்லது ஏனைய நிதி பிழைகள் காணப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| | | | காரணமாக திறைசேரிக்கு தொடர்புடைய பதிவேடுகளினை சமர்பிபப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (இ) | 2007 தொடக்கம் 2010 காலப்பகுதியின் போது கிரியுல்ல வலயக் கல்வி அலுவலகத்தில் ஏற்பட்ட ரூபா 13,609,655 நிதி சரிப்படுத்தல்கள் தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை காரணமாக அந்தத் தொகையினை மீள அறவிட முடியாது காணப்பட்டது. | அந்த நிதி ஊழலுடன் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து ரூபா 13,609,655 மொத்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | வலய அலுவலகத்தில் மொத்தமாக ஏற்பட்ட ரூபா 13,609,655 பற்றி நிதி ஊழல் தொடர்பில் பிரதம செயலாளர் அலுவலகத்தினால் புலனாய்வுகளினை மேற்கொண்டு பின்னர் சட்டமா அதிபதி திணைக்கத்திற்கு தகவல் கையளிக்கப்பட்டிருக்கின்றது. |
| (ஈ) | 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 01/2010/01 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு சுற்றறிக்கைளின் அறிவுறுத்தல்களுடன் இணங்காது குருநாகல் மாவட்டத்திலுள்ள 4 உள்ளராட்சி அரச நிறுவனங்களினால் 2012 ஆகஸ்ட் 7 இல் இருந்து 16 ஆம் திகதி வரை வியட்நாம் சுற்றுலாக்காக சபை நிதியிலிருந்து செலவிடப்பட்ட ரூபா 566,673 பணத்தை அறவிடுவதற்கு 2018 ஒக்தோபர் 27 இல் நடாத்தப்பட்ட மாகாண COPA இல் வழங்கப்பட்ட அறிவுறுத்தல், 2019 மே 10 இல் உள்ளவாறு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய அதிகாரிகளினால் COPA பரிந்துரைகளினை அமுல்ப்படுத்தாமைக்காக நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | 2019.04.04 இல் இடம் பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் வியட்நாம் சுற்றுலாக்கள் தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மேலும், அந்த சுற்றுலாக்களில் பங்குபற்றியிருந்த தலைவர் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் அவர்கள் பெற்றிருந்த மிகைப் பணத்திணை வைப்புச் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த காசு இது வரையில் திருப்பியனுப்பபபட்டிருக்கவில்லை. |

## 6.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 இல் இருந்து 2023 ஆம் ஆண்டு வரை அமுல்ப்படுத்தப்படவுள்ள ஐக்கிய நாடுகளின் நிலைபேறான இலக்குகள் மற்றும் நோக்கங்களினை அடைந்து கொள்வது தொடர்பில் வடமேல் மாகாண சபையினால் முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் 2019 ஆம் ஆண்டில் பாதீட்டு மதிப்பீட்டினை தயாரிக்கும் போது நிலைபேறான இலக்குகளினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான இலக்குகள் மற்றும் நோக்கங்களினை அடைந்து கொள்ளும் பொருட்டு திட்டங்களினை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இந்த விடயத்தினை புலனாய்வு செய்த பின்னர் பதில்கள் வழங்கப்படும். |